# சநாதன மாற்றமும் மறு ஆக்கமும் - பாண்டிய நெடுஞ்செழியனை முன்வைத்து

# Chances of Sanathana and its Re-Creation – Based on Pandiya Nedunchelian

*முனைவர் சொ. ஏழுமலை*
உதவிப் பேராசிரியர்
பெரியார் அரசு கலைக்கல்லூரி(த), கடலூர்

**Dr. C. Elumalai**
*Assistant Professor*
*Periyar Government Arts College, Cuddalore*

## ஆய்வுச் சுருக்கம்

*ஆரியர்களின் வருகைக்குப் பிறகு இந்திய அளவில் வேதம் முதன்மைப் பெற்று அதன் கருத்துக்கள் வழி நடப்பது கட்டாய மயமாக்கப்பட்டது. இதன் பின்னர் இரண்டாம் தலைமுறை ஆரியர்கள் தங்கள் கருத்து களுக்கு ஏற்ப வேதக் கருத்துக்களை மாற்றி உபநிடதங்களாகவும், மனுஸ்மிருதிகளாகவும் ஆக்கினர். பின்னர் அவற்றின் வழி நடப்பதே சனாதன தர்மம் என்ற நிலையை உருவாக்கினர். குறிப்பாக வேதக் கல்வியைக் கற்பது பிராமணர்களுக்கே உரியது என்ற கட்டாயத்தை முன்வைத்து அனைத்துத் தரப்பினரிடமும் இருந்து கல்வியையே பறித்து அதனைப் பிராமணர்களுக்கே உரியதாக ஆக்கினர். இதனால் வேளாளர் மற்றும் சூத்திரப் பிரிவினர் மிகுவும் பாதிக்கப் பட்டனர். இதனைத் தொடர்ந்து பல உரிமைகள் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டன. இத்தகு சூழலைத் தென்னாட்டிலும் ஏற்படுத்தினர். இருந்தபோதிலும் எதிர்பார்த்த அளவில் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. பாண்டிய நெடுஞ்செழியன் போன்றோர் கல்வி கற்றலை அனைவருக்கும் உரியதாக ஆக்கி சமதர்ம சமுதாயச் சிந்தனைகளை முன்வைத்துச் சனாதன தர்மத்தை மறு ஆக்கம் செய்தனர். இத்தகுப் போக்கையே கட்டுரை காட்டுகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *ஆரியர், சனாதன தர்மம், வர்ணாசிரமம், உபநிடதம், மனுஸ்மிருதி, சூத்திரர், இராசசூயம்*

## Abstract

*After the arrival of the Aryans, the Vedas became dominant in India and to follow its ideas became mandatory. After this, the second generation Aryans modified the vedic concepts according to their own ideas and made them into Upanishads and Manusmritis. Then they created the situation that following this way as the sanathana dharma. They took away education from all classes and made it exclusive to brahmins. Due to this the Velala and Sutras sects suffered the most. Following this many rights were taken away from them. They created such a situation in south also. However, they could not achieve the expected success. By making education available to all and presenting Samadharma society ideaspeople like Pandiya Nedunchezhian re-created Sanatana Dharma. The article shows this trend.*

***Keywords:*** *Aryar, Sanatana Dharma, Varnasiramam, Upanidatham, Manusmiruthi, Sutras, Rasasooyam.*

**Citation**

Elumalai, C. "Chances of Sanathana and its Re-Creation – Based on Pandiya Nedunchelian" *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 29–36.

**முன்னுரை**

*வந்தேறிகளாக இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் வேதங்களைக் கட்டமைத்து அவற்றை மாறாமல் பின்பற்றுவதைச் சநாதன தர்மம் என்று பதிவு செய்தார்கள். அதற்குப் பின்னர் இரண்டாம் தலைமுறை ஆரியர்கள் வேதங்களைத் திரித்து உபநிடதங்களாகவும், மனுஸ்மிருதியாகவும் செய்து சனாதன தர்மமென வசதிக்கு ஏற்ப மாற்றங்களைப் புகுத்தினர். மாற்றங்களின் முதல் நிலையில் வருணாசிரம அளவு நிலையாகப் பிறப்பின் அடிப்படையில் நால்வகைப் பிரிவை ஏற்படுத்தி, அதில் தாங்களே முதல் பிறப்பாளர்கள் என்பதை ஏற்கச் செய்தனர். இதன்பின்னர் இந்திய மக்களை அடிமைகளாக மாற்ற முயற்சி எடுத்தனர். அம்முயற்சியில் அவர்கள் பெரிதும் வெற்றி அடைந்தனர். இருப்பினும் தென்னாட்டில் அவர்கள் குறிப்பிடத்தக்க வெற்றி அடைந்த போதிலும் முழுமையாக அவர்களால் இலக்கை அடைய முடியாத வகையில் தமிழ் அரசர்களில் சிலர் செயல்பட்டனர். குறிப்பாகப் பாண்டியன் நெடுங்செழியன் ஆரியர்களை எதிர்த்துச் சண்டையிட்டு விரட்டியடித்ததோடு அல்லாமல் அவர்களின் சனாதன தர்மத்தைக் கட்டுடைப்பு செய்து சமதர்ம சமுதாயத்தைப் படைத்துக் காட்டினான். இத்தகைய போக்கைக் காலத்தின் தேவை கருதி இக்கட்டுரை முன்வைக்கின்றது.*

*பொதுவாகச் சனாதன தர்மம் குறித்துப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ள போதிலும், பாண்டிய நெடுஞ்செழியனை முன்வைத்த நிலையில் இது முதல் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வு தமிழகச் சூழலில் கல்வியின் சிறப்பை எடுத்துக் காட்டுவதை மதிப்பீடாகக் கொள்கின்றது; சனாதன தர்மத்தில் கல்வி கற்றலின் உண்மையான நிலையை ஆராய்வதைநோக்கமாகக் கொள்கின்றது; கல்வி எல்லோருக்கும் பொதுவாக இருந்துள்ளது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது. இதனைக் காண இக்கட்டுரை மனுஸ்மிருதி கருத்துக்களோடு தமிழ் இலக்கியக் கருத்துக்களை ஒப்பீடு செய்ய ஒப்பீட்டு முறை ஆய்வையும், மனுஸ்மிருதி, தமிழ் இலக்கியக் கருத்துக்களை விளக்கிக் காட்ட விளக்கமுறை ஆய்வையும் மேற்கொள்கின்றது. இதற்காக மனுஸ்மிருதி பற்றி எழுந்த நூற்களையும் புறநானூற்றுப் பாடல்களையும் ஆய்வு மூலங்களாகவும் எல்லைகளாகவும் இவ்வாய்வு கொண்டு அமைகின்றது.*

**சனாதனம் - விளக்கம்**

*சனாதனம் என்பதற்கான விளக்கத்தை யாரும் துல்லியமாக உரைக்கவில்லை. சனாதன தர்மம் என்பது நிலையான தத்துவ ஞானம் அல்லது  நம்பிக்கை என்ற பொருளைத் தருகின்றது என்கிறார் கோதை ஜோதிலட்சுமி.(தினமணி, டிசம்பர் 2019).*

சுவாமி பிரபஞ்சநாதன், சனாதன தர்மம்(உண்மையை நோக்கிய பயணம்) என்ற நூலில்,

***வேதம் என்ற ஒரு வாழ்வியல் முறையான விதையைக் கொடுத்து, அதை சனாதன தர்மம் என்ற ஒரு மிகப்பெரிய மரமாக நமக்கு வளர்த்துக் கொடுத்தவன்சாட்சாத் அந்த சர்வேஸ்வரனே ஆகும்***

(prapanjavidya.blongspot.com/2019/06/blog.posteq.html)

*என்று குறிப்பிடுகிறார்.சனாதனம் என்பதற்கு அண்மைக்காலச் சூழலில் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன என்ற போதிலும் வேதக் கருத்துக்களே சனாதனக் கருத்துக்கள் என்ற முடிவுக்கு வரலாம்.*

**சனாதனக் கருத்துக்களின் மாற்றம்**

நான்கு வகையான வேதங்கள் தொழில் அடிப்படையில் காணப்பட்ட நான்கு வகையான மக்களின் வாழ்வியல் முறைகளை எடுத்தியம்பின. ஆனால் பின்வந்த இரண்டாம் தலைமுறை ஆரியர்கள் வேதங்களைத் தெரிந்து கொள்ள முடியாதபடி வேதங்களைப் பிற பிரிவினர் கற்பதே பாவம் என்ற நிலைக்குக் கொண்டு வந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாழ்ந்த தமிழ் இனத்தில் ஆரியம் நால் வர்ணப் பாகுபாட்டை நுழைத்து மற்றவர்களைப் பின்னுக்குத் தள்ளி தானே முதல் பிரிவினராக வகுத்துக் கொண்டு, தனக்கு வசதியான சட்டத் திட்டங்களைக் கடவுள் பெயரால் திணித்தது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நிலையில் அவரவர்களுக்கு உரிய தர்மமாக,

பிராமணனுக்கு வேத வேதாந்தங்களை ஓதி உணரும் ஞானமும் க்ஷத்திரியனுக்கு இந்நூலில் சொன்னபடி அரசியல் நடத்தும் ஞானமும் வைசியனுக்குப் பயிர் வர்த்தகமும் இவைகளைக் குறித்த ஞானமும் சூத்திரினுக்குப் பிராமணப் பணிவிடையும் தவமாகும் (மனு. அத்.11. சு.235) (சுவாமி சிவானந்த சரஸ்வதி, மனுநீதி விளக்கம், ப.52)

என்று வகுத்து நடைமுறைப் படுத்த முனைந்தது.

சங்க காலத்திலே இத்தகைய ஆரியத் திணிப்பு அமோகமாக நடக்கத் தொடங்கிவிட்டது. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணத்தாயன், மனுநீதி கண்ட சோழன் போன்றோர் இவர்கள் கொள்கைக்கு இரையாகினர். மேலும் சேர, பல்லவ மன்னர்களும் ஆரியர்களுக்குக் கொடிபிடித்தனர். இவர்களைக் கொண்டே ஆரியக் கொள்கைகள் தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்டன. தமிழர்களில் பெரும் பிரிவினரைச் சூத்திரனாகவே வகுத்துக் கொடுத்து அவர்கள் மீது கொடுமைகள் ஏற்றப்பட்டன. அதனால்தான் ராமானுஜ தாத்தாச்சாரியார்,

பிராமணனுக்கு தவம், வேத அறிவு, ஞானம், விஞ்ஞானம் உள்பட 11 குணங்களை வகுத்த மனு - சூத்திரனைப் பற்றி இப்படி எழுதியது. 'சூத்திரனுக்கு அறிவு கொடுக்காதே, தர்மோபதேசம் பண்ணாதே, சண்டை வந்தால் சூத்திரன் எந்தப் பக்கம் இருக்கிறானோ அந்தப் பக்கத்துக்கே தண்டனை கொடு. அவனை உதை.' இப்படிப் பேசுகிறது (ராமானுஜ தாத்தாச்சாரியார், இந்துமதம் எங்கே போகிறது?, ப.10)

என இந்து மதம் எங்கே போகிறது என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகிறார். அதன்படிதான் சூத்திரனாகிய ஏகலைவன் க்ஷத்திரியனுக்குரிய வில் வித்தையைத் தெரிந்து கொண்டபோது, துரோணாச்சாரி அக்கலையைப் பயன்படுத்த முடியாதபடி கட்டைவிரலைப் பறித்துக் கொள்கிறார்.

**வேதக் கல்வியும் மோட்சமும்**

தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்த மட்டில் கல்வி என்பது ஏட்டுக்கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. மக்களை ஆட்சிசெய்த மன்னன் குதிரை ஏற்றம், வாள் வீச்சு, அம்பு எய்தல், மல் யுத்தம் போன்ற வீரக் கலைக் கல்விகளுடன் ஏட்டுக் கல்வியையும் கற்றுத் தேர்ந்தவனாக இருந்தான். நாட்டில் வாழ்ந்த வணிகர்கள் வணிகப் பயன்பாட்டிற்கான எண் (கணக்கு) சம்பந்தமான நூற்களைக் கற்றனர். வேளாளர் மற்றும் பிறர் தங்கள் தொழிலுக்கு ஏற்ற நுண்கலை நூற்களைக் கற்று வாழ்ந்தனர். இன்னும் சொல்லப் போனால் பாமர மக்களும் கற்றவர்களாக இருந்தனர் என்பதைப் பாணர்களின் பாட்டுத் திறத்தாலும், பாணர்களின் நூற்களாலும் அறிந்து கொள்ளலாம்.

*ஆனால் இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்கள் கல்வி என்றாலே வேதம் ஓதல்தான் என்ற நிலைப்பாட்டை அதிகார வர்க்கத்தினரைக் கொண்டு அழுத்தமாகப் பதிவு செய்தனர். அதுமட்டுமல்லாமல் அக்கல்வியைப் பிராமணன் மட்டுமே கற்பதுதான் மனுதர்மம் என்ற சட்டத்தைப் பதிய வைக்கத் தொடங்கினர். அதற்காக,*

*பார்ப்பனர் இந்து மனு சாஸ்திரத்தைப் படிக்கலாம். மற்ற வருணத்தாரோடு ஓதுவிக்கக் கூடாது (மனு. அத். 1சு.103) (சுவாமி சிவானந்த சரஸ்வதி, மனுநீதி விளக்கம், ப.2)*

*என்று அவர்களுக்கான கட்டளையாகக் கூறினார்கள். இந்தப் போக்கால் அரசாண்ட க்ஷத்திரியர்களின் ஆதரவு கிடைக்காமல் போயிற்று. இதனைத் தொடர்ந்தே வேதம் ஓதலை க்ஷத்திரியர், வைசியர் முதலியோர் கேட்கலாம் என்ற விதிவிலக்கை முன்வைத்துச் சூத்திரர்களை ஒதுக்கினார்கள்.*

*வேதமோதும்போது எழுத்து, சுரம் இவைகள் பிரித்து தோற்றாமல் ஓதக் கூடாது. சூத்திரன் அருகிலிருக்கும்போதும் ஓதலாகாது (மனு. அத்.4 சு.99)(சுவாமி சிவானந்த சரஸ்வதி, மனுநீதி விளக்கம், ப.14)*

*என்பது மனுதர்மம் என உரைத்தார்கள். இதன் அடிப்படையிலே தொல்காப்பியம் போன்ற நூற்களும்,*

***ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன***

***மு.சண்முகம் பிள்ளை(பதி.), தொல்காப்பியம், நூற்பா.28)***

*என்று கூறத் தொடங்கின. கல்வி கற்றல் சூத்திரனுக்கு மறுக்கப்பட்டதே தவறு. இதனைவிட மேல்சென்று,*

*வேதமோதாமலும், பிள்ளைப் பெறாமலும், யாகம் செய்யாமலும், மோட்சத்திற்கு முயற்சி செய்கிறவன் நரகத்தை அடைவான் (மனு. அத்.6 சு.37) (சுவாமி சிவானந்த சரஸ்வதி, மனுநீதி விளக்கம், ப.20)*

*என்று சூத்திரனுக்கு நகரமே உரியது என முழங்கினர். இதனால் ஒடுக்கப்பட்ட சூத்திரன் மனரீதியாக அமுங்கப்பட்டான். இவ்வாறு ஆரியர்கள் கல்விக்கும் மோட்சத்திற்கும் முடிச்சுப் போட்டு கல்வியைக் எட்டாக் கனியாகவும், கல்வியை முதல் தகுதியாகவும் முழங்கினார்கள்.*

**ஆரியர் கட்டுப்பாட்டில் கல்வி**

*தமிழ் மணம் ஓங்கே ஆட்சி செய்த பாண்டியர்கள் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் உயர்ந்த நிலையில் கட்டி எழுப்பினார்கள். மதுரையைத் தலைமையாகக் கொண்டு தமிழ் நிலத்தைப் போற்றினார்கள். இவர்களைச் சார்ந்து வாழ்ந்த புலவர்கள் பலரும் தமிழ்ப் பண்பாட்டைப் பறைச ாற்றக்கூடிய வகையில் படைப்புகளை அளித்தார்கள். பாண்டிய நெடுஞ்செழியனைச் சார்ந்து வாழ்ந்த குடபுலவியனார்,*

***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறம் 18:19)***

*என்று உணவின் முதன்மையைக் கூறினார். இவ்வடி சாதாரணமாகப் பார்க்கின்ற போது உணவின் சிறப்பைக் கூறக்கூடியதாக இருந்தாலும் உணவை உற்பத்தி செய்யும் சூத்திரனுக்கு முதன்மை கொடுப்பதாகவும் அவர்கள் கவனிக்கப்பட வேண்டியவர்களாகவும் திகழ்வதை எடுத்துக் காட்டக்கூடியதாக அமைவதை அறியலாம்.*

***மதுரை நகரத்திலே வாழ்ந்த மற்றொரு புலவரான மருதனிள நாகனார்,***

***ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்***

***போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை***

*பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்*
*அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை*
*அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்*
*செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை*
*நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை (நெய்தல் கலி 16:6-12)*

*என்று வேத்திற்கு மாற்றாகப் பல வரையறைகளை வழங்கி தமிழ்ச் சமுதாயத்தின் மாண்பைக் கட்டியெழுப்பினார். இத்தகைய போக்கு பரவலாகத் தொடர்ந்ததால் ஆரியர்கள் பாண்டிய நாட்டில் வேரூண்றுவது சிரமமானது.*

*எனினும் ஆரியர்கள் படிப்படியாக, அரசர்களிடத்துச் சென்று பேரரசர்களாக 'இராஜசூயம்' யாகம் நடத்தினால் ஆகலாம் என்ற மாயை விரித்து அவர்களுக்காக அத்தகைய யாகங்களை உயிர்ப்பலிகளைப் பெரிய அளவில் இட்டு நடத்திக் கொடுத்தனர். இத்தகைய நிலையால் அரசர்களின் ஆலோசகர்களாக ஆரியர்கள் அவசியமாக்கப் பட்டனர். இதன் பின்பே ஆரியர் கட்டமைத்த வருணாசிரம சாதிய முறை கட்டாயப்படுத்தப்பட்டது.*

*இதன்பிறகு தமிழ்க்கல்விப் பின்னுக்குத் தள்ளப்பட்டு வேதக் கல்வி முதன்மை பெறத் தொடங்கிற்று. நாளடைவில் தமிழ்க் கல்வியும் கீழ்ப் பிரிவினரிடையே பிடுங்கப் பெற்று பிராமணர் மயமாயிற்று. இத்தகைய போக்கைத் தான் க. சுப்பிரமணியம்,*

*பிராமணர்கள் பெரும்பாலும் புரோகிதர்கள், க்ஷத்திரியர்கள் ஆட்சியை மேற்கொண்டு போர்த் தொழிலில் ஈடுபட்டனர். வைசியர்கள், வாணிபர்கள், சூத்ரர்கள் ஏனையோர்க்குப் பணிந்த ஏவலாளர்கள். இந்நால்வகைப் பாகுபாட்டிற்குப் புறம்பானவர்கள். ஜாதியில்லாத பஞ்சமர்கள் அல்லது ஐந்தாம் வர்ணத்தினர் தொடக்கத்தில் அவரவர் மேற்கொண்ட தொழில் அடிப்படையில் அமைந்த வகுப்புப் பாகுபாடு பிற்காலத்தில் பிறப்பாலேயே அமைந்ததாகக் கருதப்பட்ட ஜாதிப் பாகுபாடாக மாறிற்று. முந்தியது மாறுந் தன்மையது. பிந்தியது மாறாத் தன்மையது என்பதே இவற்றிடை வேறுபாடு. இத்தகைய சமூக அமைப்பு அக்காலக் கல்விக்கு நிலைக் களனாயிருந்த பிராம்மணர்களால் போற்றப்பட்டது (ந. சுப்பிரமணியன், இந்திய வரலாறு, பக்.40,41)*
*என்று படம்பிடித்துக் காட்டுகின்றார்.*

**அனைவருக்கும் கல்வி அளித்த பாண்டியன்**

*தென்குமரிக்குத் தெற்கே இருந்த தமிழகம் கடல்கோலால் சிறிது அழிய மக்கள் வசதியாக வாழ இடம்போதாமை இருந்ததால் பாண்டிரும் சோழரும் சேரும் வடபகுதி நோக்கிப் படையெடுத்து சென்றனர். வடவர்களும் தென்பகுதி நோக்கிப் படையெடுத்து வந்தனர். அங்ஙனம் வந்தோரை வென்றும் அடிபணிந்தோரை ஆதரித்தும் ஆட்சி நடத்தினர். எனினும் வெளிப்படையாகத் திரளாக ஒன்று சேர்ந்து பாண்டியன் நெடுஞ்செழியன் மீது ஆரியர்கள் போர் தொடுத்தனர். அவர்களை எல்லாம் தனியொருவனாக நின்று நெடுஞ்செழியன் வென்றான். எனவேதான் இவனை மட்டும் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்றனர்.இவனை, வடவாரியர் படை கடந்து, தென்றமிழ்நா டொருங்கு காண்ப, புரைதீர் கற்பின் தேவி தன்னுடன், அரைசுகட்டிலிற் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் என்று இளங்கோவடிகளும் குறிப்பிடுகிறார் என ஔவை சு. துரைசாமிப்பிள்ளை முதலானோர் உரைப்பர். (ப.368)இக்கருத்தும் ஆரியப்படை என்பதன் மீதான கருத்தும் விவாதத்திற்குரியன.*

*எனினும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கூறும் பின்வரும் கருத்து கவனப்படுத்த வேண்டியுள்ளது.*

*...பண்டைத் தமிழ் நூல்கள், தமிழ்க் கருத்துக்கள் பலவாகவும் வடவாரியக் கருத்துக்கள் சிலவாகவும் கொண்டுள்ளன. தமிழ்க் கருத்துக்களே நிறைந்திருந்த இலக்கணங்களும் இலக்கியங்களும் குறிக்கொண்டு தேடி யழிக்கப்பட்டன. வடவாரியக் கருத்துக்கள் சிலவாயினும் உடைய பழந்தமிழ் நூல்களே உள்ளன. இப்போதுள்ள சங்க இலக்கியங்கள் நூற்றுக்கு மூன்று விழுக்காடேனும் வடவாரியக் கருத்துக்களை யுடையவா யிருத்தலாற்றான் நிலைபேறு பெற்றன. அடைக்கலம் புக்கு உட்பகையாய்ப் புறத்தே வெளிப்படாதொழுகினாரே ஒழிய.. (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு, ப.368)*

*இந்த மேற்கோள் தமிழ் நூற்களும் தமிழ்ப் பண்பாட்டுக் கருத்துக்களும் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இவ்வாறுதான் ஆரியர்கள் பலவற்றைத் தமிழர்களிடம் இருந்து பிடுங்கி, மாற்றிய உபநிடதம், மனுஸ்மிருதி ஆகியவற்றின் கருத்துக்களை ஏற்றினர். இந்த அடிப்படையில்தான் கல்வியும் பிடுங்கப்பட்டு அது ஆரியர்களுக்கே உரியதாக ஆக்கப்பட்டது அல்லது பிராமணக் கல்வியே சிறந்தது. தமிழ்க் கல்வி தாழ்ந்தது என்ற நிலை உருவாக்கப்பட்டது.*

*இத்தகு சூழலில்தான் வடவர்களைப் போரிலே வென்ற பாண்டிய நெடுஞ்செழியன் உட்பகையாக ஆரியர்கள் செய்யும் சதிச் செயல்களை முறியடிக்க நினைத்தான். அதனுடைய தொடக்க நிலையாகக் கல்வி இருப்பதை உணர்ந்தான் அதற்காகத்தான் தானே கல்வியின் சிறப்பை முன்மொழிந்து அனைவரையும் கல்வி கற்றிட அழைப்பு விடுத்தான்.*

***உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,***
***பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!***
***பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,***
***சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்;***
***ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,***
***மூத்தோன் வருக ̎ என்னாது, அவருள்***
***அறிவுடை யோன் ஆறு அரசும் செல்லும்;***
***வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,***
***கீழ்ப்பால் ஒருவன் கற்பின், -***
***மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே (புறம்.183)***

*இப்பாடலில் பாண்டிய நெடுங்செழியன் கல்வி குறித்து நான்கு சிறந்த கருத்துக்களை முன்வைக்கின்றான். 1.தேவைப்படும் நேரத்தில் உதவியும், தேவைப்படும் பொருளைக் கொடுத்தும் ஆசிரியரை வழிபட்டு கற்றல் சிறந்தது. 2. பெற்ற தாயே கற்றவனுக்காக மனம் திரிவாள், 3. அறிவுடையோன் ஆலோசனை கேட்டே அரசும் நடக்கும், 4. கீழ்க் குலத்தில் பிறந்த ஒருவன் கற்றால் அவன் மேற்குலத்தானாகக் கருதப்படுவான், மேற்குலத்தான் அவன் ஆலோசனை கேட்டு நடப்பான்.*

*இக்கருத்துக்கள் ஆரியர்கள் திரித்திருந்த சமூகத்தை மாற்றக் கூடியதாக அமைவதை எளிதாகப் பார்க்க முடிகின்றது. கல்விச் சாலை வழியாகச் செல்லும்போது கற்றுத் தருவதைக் கேட்டாலே அவரைப் பிடித்து காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிய சமூகத்தில் கீழ்ச்சாதிக்காரன் முதல் அனைவரும் கற்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தது மாபெரும் செயலாக அமைந்தது. அதேநேரத்தில் அரசரே இவ்வழைப்பை விடுத்ததால்ஆரியர்களால் கற்றலுக்கு எதிராக எந்தவிதத் தண்டனையையும் அளிக்க முடியவில்லை. இதனால் பாண்டியன் ஆட்சியில் இருந்த மக்கள் கற்றலை மேற்கொண்டு சமூக முன்னேற்றம் கண்டனர். பாண்டிய நெடுங்செழியன் இவ்வாறு ச னாதன தர்மத்தை மறுஆக்கம் செய்ததால் கல்வியின் மேன்மை தொடர்ந்து தமிழ்ச் சமூகத்தால் முன்வைக்கப்பட்டது. அதனால்தான் பின்னர்வந்த அதிவீர ராம பாண்டியர்,*

**கற்கை நன்றே கற்கை நன்றே**

***பிச்சைப் புகினும் கற்கை நன்றே(வெற்றி வேற்கை, பா.35)***

*என்று பேசத் தொடங்கினார். 19ஆம் நூற்றாண்டில்வி. நாராயண ஐயரால் எழுதப்பட்ட சநாதந தர்மம் என்பதில் கூட,*

*வேதாத்தியனம் செய்யாமல் வேறு தொழில்களைச் செய்கிற பிராமணன் தானும் தன் சந்ததிகளும் ஒழுங்கே இந்த ஜன்மத்திலே சூத்திரனாகிறான்*

*என்றும்*

*தத்தம் ஒழுக்கத்தால் சூத்திரன் பிராமணனாவான். பிராமணன் சூத்திரனாவான். இந்த விதியே க்ஷத்திரியனுக்கும் வைசியக்கும் என்று அறி (வி. நாராயண ஐயர், சநாதந தர்மம்,ப.288) என்றும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. எனினும் வர்ணாசிரமமுறையே ஒழிந்திட வேண்டும் என்பதே பாண்டியன் கருத்தாக அமைந்துள்ளதுதான் சிறப்புக்குரிய ஒன்று எனலாம்.*

**முடிவுரை**

*சனாதன தர்மம், சமூகம் நன்றாக வாழ்ந்திட வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட நிலையில் பின்வந்த ஆரியர்கள் உடநிடதங்களாலும் மனுஸ்மிருதியாலும் ச னாதனக்கருத்துக்களைமாற்றிதன்னையேஉயர்ந்தவர்களாகஉயர்த்திக்கொண்டுமற்றவர்களை அடிமைப் படுத்தினர். இதனால் மக்களின் அடிப்படை வாழ்க்கை முறையே மாற்றமுற்று அடிமைச் சமுதாயம் ஆனது. உயர்ந்த சாதிக்கே கல்வி உரியதாகவும் முழங்கப்பட்டது. இத்தகு சூழ்ச்சி யை அறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் ஆரியர்களைப் போரிலே வென்றதோடு மட்டுமல்லாது அவர்கள் உருவாக்கிய அடிமைச் சமுதாயச் சிந்தனைகளையும் மாற்றிட அனைவரும் கற்றிட அழைப்பு விடுத்து தானே அவர்களுக்கு அரணாகவும் நின்றான். இதனால் கற்றலின் தேவை குறித்துப் பரவலாகப் பேசப்பட்டது.*

*சனாதன தர்மம் என்ற பெயரில் மறுக்கப்பட்ட கல்வியை மீட்டெடுத்த நிலையை இக்கட்டுரை காட்டியது, இதன் தொடர்ச்சியாக மீட்டெடுக்கப்பட்ட மற்றச் சமூகக் கூறுகளையும் பண்பாடுகளையும் ஆராயலாம்.*

**துணைநூற்பட்டியல்**

**புத்தகங்கள்**

1. *சண்முகம் பிள்ளை, மு., (பதி.), தொல்காப்பியம் இளம்பூரணம், முல்லை நிலையம், 9, பாரதி நகர் முதல் தெரு, சென்னை - 17, 2000*

2. சுப்பிரமணிய சர்மா (உரை.), வெற்றி வேற்கை, ஆர்.கணபதி அண்டு கம்பெனி, பிரம்பூர், சென்னை, 1919
3. சுப்பிரமணியன், ந., இந்திய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98, பிப்ரவரி, 2009
4. சுவாமி சிவானந்தா சரஸ்வதி, 'மனுநீதி விளக்கம்', குடியரசுப் பதிப்பகம், ஈரோடு, 1934.
5. துரைசாமிப் பிள்ளை, ஔவை சு., (உரை.), புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1, 1967.
6. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1, 1962.
7. நாராயண ஐயர், வி., சநாதந தர்மம், ஆநந்தா அச்சுக் கூடம், சென்னை, 1905.
8. ராமானுஜ தாத்தாச்சாரியார், இந்துமதம் எங்கே போகிறது, நக்கீரன் பப்ளிக்கேஷன், சென்னை, 2014.

## Referencs

1. Shanmugam Pillai, M., (ED.), Tholkappiam Ilampooranam, Mullai Nilayam, 9, Bharathi
2. nagar, First Street, Chennai – 17, 2000.
3. Subramania Sharma (Urai.) Vetri Verkai, R.Ganapathi and company, Perambur, Chennai. 1919.
4. Subramanian, N., India Varalaaru, New Century Book House, Chennai – 98, February 2009.
5. Swami Sivananda Saraswathi, 'Manuneedhi Vilakkam', Kudiyarasu pathipagam, Erode,
6. 1934.
7. Duraisamy pillai, Auvai Su., (Urai.), Puranaanooru, Saiva Sithandha Noorpathipu Kazhagam, Chennai – 1, 1967.
8. Nachinarkkiniar urai, Kalithogai, Saiva Sithandha Noorpadhipu Kazhagam, Chennai – 1, 1962.
9. Narayan Iyer, V., Sanatana dharmam, Anantha Achchu Koodam, Chennai, 1905.
10. Ramanuja Thathachariyar, Indumadham enge Pogirathu, Nakkeeran Publication, Chennai, 2014.

## Magazine

1. Dinamani, December 2019

## Website Address

1. prapanjavidya.blongspot.com/2019/06/blog.post_eq.html